பணிப்பாளர், செய்தி 2017 புரட்டாதி 19

**ஊடக அறிக்கை**

**குடித்தன வருமானங்கள் செலவுகள் அளவீடு - 2016**

**தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு**

**தொ.பே: 011 - 2147458 தொலைநகல்: 011 - 21447447 மின்னஞ்சல்: Sample.Survey@Statistics.gov**

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களமானது (DCS) குடித்தன வருமானம்/ செலவு, வருமான வேறுபாடுகள் மற்றும் வறுமை போன்றன தொடர்பான தகவல்களைத் தயாரிப்பதற்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவை குடித்தன வருமானங்கள் மற்றும் செலவுகள் பற்றிய அளவீட்டை (HIES) நடாத்தியிருக்கின்றது. மற்றும் 2016 இல் நடாத்தப்பட்ட அளவீடானது இத் தொடரில் 9வது ஆகும். இந்த அளவீட்டுக்கான பொருத்தமான மாதிரியைத் தெரிவு செய்வதில், தொழில்நுட்ப ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மாதிரித் தெரிவின் படிமுறையுடனும் மற்றும் நடைமுறையுடனும் இணங்கக் கூடிய **25,000** குடித்தனக்கூறுகளின் ஒரு மாதிரியானது இந்த அளவீட்டுக்காக முழு நாட்டையும் உள்ளடக்கக்கூடியவாறு தெரிவு செய்யப்பட்டது. தரவு சேகரிப்பானது **2016** ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை இடம்பெற்றது.

## குடித்தன வருமானங்கள்

**2016** ம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட குடித்தன மாதாந்த சராசரி வருமானமானது **62,237** ரூபாவாக இருப்பதுடன் இது **2012/13** ம் ஆண்டில் இருந்ததை விட **35.7%** பெயரளவிலான அதிகரிப்பையும் காட்டுகிறது. **2013** ம் ஆண்டின் நுகர்வோர் விலைச் சுட்டெண் என அடிப்படையில் வைத்துப் பார்க்கும் போது உண்மையான குடித்தன மாதாந்த சராசரி வருமான அதிகரிப்பானது வெறும் **15.8%** மாகவே காணப்படுகிறது. மதிப்பீடு செய்யப்பட்ட குடித்தனங்களின் மாதாந்த சராசரி வருமானமானது கிராமம், நகரம், பெருந்தோட்டப் பிரிவுகளில் முறையே **58,137** ரூபா, **88,692** ரூபா, **34,804** ரூபாய்களாக இருக்கிறது.

## குடித்தன வருமான வேறுபாடுகள்

குடித்தன வருமானங்களின் மதிப்பிடப்பட்ட மாதாந்த சராசரியானது இழிநிலை வறுமையான **20%** (1 மற்றும் 2 ம் தசமனைகள்) வறுமை **40%** (1 இல் இருந்து 4 வது தசமனை வரை) கருத்தரம் **60%** (3 வது இருந்து 8 வது வரையான தசமனை) பணக்கார நிலை **20%** (9 வது மற்றும் 10 வது தசமனை) என்பவைகள் முறையே **14,843** ரூபா, **22,423** ரூபா, **46,097** ரூபா, **158,072** ரூபாக்கள் என்ற வகையில் அமைந்திருக்கிறது.

**2016** ம் ஆண்டில் இலங்கையின் மதிப்பிடப்பட்ட தலாவீத குடித்தன மாதாந்த வருமானமானது **16,377** ரூபாய்களாகும். இலங்கையில் வருமானம் பெறுபவர்களின் மாதாந்த சராசரியானது **33,894** ரூபாக்களாக மதிப்பிடப்பட்டுள்ளது, வருமானம் பெறுபவர்களின் மாதாந்த சராசரியின் இடையமானால் **23,260** ரூபாக்கள் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. **2016** ம் ஆண்டில் குடித்தனத்தில் வருமானம் பெறுவோர்களின் சராசரியானது **1.8%** ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. குடித்தன வருமானங்களின் கினி குணகத்தின் தேசிய ரீதியானது பெறுமானமானது **2016** ஆம் ஆண்டில் **0.45%** ஆக இருக்கின்றது. ஆனால் இது **2012/13** இல் **0.48** ஆகவும் இருந்தது.

## குடித்தன செலவினங்கள்

குடித்தன செலவினங்களானது உணவுப் பொருட்கள் மற்றும் உணவல்லாத பொருட்கள் என்ற வகையில் சேர்க்கப்படுகிறது. இலங்கையின் **2016** ம் ஆண்டுக்கான சராசரி குடித்தன செலவானது **54,999** ஆகும். இதில் உணவுக்கான நுகர்வுச் செலவுகள் **19,114** ரூபா **(34.8%)** ஆகவும் உணவல்லாத பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவுகள் **35,885** ரூபா **(65.2%)** வாகவும் இருக்கிறது. **2016** ஆம் ஆண்டில் குடித்தனங்களின் சராசரி செலவினமானது **2012/13** ஆண்டினை விட (**41,444** ரூபா) **33%** உயர்வானதாகவும் பதிவாகியுள்ளது. இதேவேளையில் இந்தக் காலப்பகுதியில் உணவுப் பொருட்களுக்கான மாதாந்த சராசரி **22%** (**2012/13** இல் **15,651** ரூபாவில் இருந்து **2016** இல் **19,114** ரூபாவாக) உயர்வடைந்தும் உணவல்லாதவைக்கான மாதாந்த செலவினமானது **39%** (**2012/13** இல் **25,793** ரூபாய் இருந்து **2016** இல் **35,885** ரூபா) ஆகவும் உயர்ந்திருக்கிறது. தேசியளவிலான மாதாந்த சராசரிக் குடித்தன செலவினத்தின் பெறுமதியானது **40,186** ஆகப் பதிவாகி இருக்கிறது. குடித்தனங்களின் உண்மையான மாதாந்த சராசரி செலவினமானது **2016** ஆம் ஆண்டில் **38,282** ரூபாவை எட்டியிருப்பதுடன் இது **2012/13** இல் இருந்ததை விட **13.3%** ஆல் உயர்வடைந்தும் இருக்கிறது. 2012/13 ஆம் ஆண்டுக்கான சராசரி குடித்தனச் செலவினத்தின் கினி குணகமானது 0.40 ஆக தெரிவிக்கப்பட்டபோது 2016 க்கானது 0.41 ஆக தெரிவிக்கப்பட்டிருந்தது.

## வறுமையின் போக்கு

இலங்கை மக்களின் நல்வாழ்வானது காலத்திற்கு ஏற்றவாறு எவ்வாறு மாற்றமடைகிறது என்பதை அறிந்து கொள்வதற்காக அதிகார பூர்வமான வறுமைக் கோடானது மிக முக்கியமான அளவு கோலாக பயன்படுத்தப்படுகிறது. தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களமானது **(DCS)** 2002 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடித்தன வருமான அளவீட்டின் **(HIES)** பின்னர் முதற் தடவையாக உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டினை அறிமுகம் செய்தது. இது 2002 ஆம் ஆண்டில் மக்களின் வாழக்கை முறையை பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது. அதேநேரம் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்கள **(DCS)** மானது மாவட்டங்களிற்கான உத்தியோகபூர்வ வறுமை கோட்டினையும் வெளியிடத் தொடங்கியது. இவ் வறுமைக் கோடானது மாதாந்த பணவீக்கத்தின் பா.பா.வி.சு **(CCPI)** இனால் மாற்றி அமைக்கப்படுகிறது.

இலங்கையானது கடந்த **14** வருடங்களாக வறுமையைக் குறிக்கும் செயற்திட்டத்தையும் கொண்டிருக்கிறது. **2002** இல் இருந்த மக்கள் தொகையில் 22.7 சதவீதமானோர் தலாவீத வறுமை வீதத்தினராக இருந்த போதிலும் இது **2016** ஆம் ஆண்டில் **4.1** வீதமாக வீழ்ச்சி அடைந்தும் உள்ளது.

இருந்த போதிலும் தேசிய மட்டத்தில் வறுமையான சிறந்த குறைவடையும் எல்லைகளை காண்பித்த போதிலும் இதன் சமத்துவமின்மையானது இதுவரையில் மாகாணங்களுக்கிடையிலும், மாவட்டங்களுக்கிடையிலும் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது.

பொதுவாக தலாவீத வறுமை சுட்டியானது நகரங்கள் மற்றும் கிராமங்களை விட பெருந்தோட்டப் பகுதியில் உயர்வானதாகவே உள்ளது. இந்த அளவீட்டைப் பற்றிய விரிவான வெளிப்பாடுகளானது திணைக்கள இணையத்தளத்தில் உள்ள செய்திக் குறிப்பில் காணப்படுகிறது. WWW.Statistics.gov.lk

கலாநிதி. ஏ. ஜே. சதரசிங்க
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்கம்